ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

## ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகன் வாயமுதின் சில திவலைகள்

==========================================================================

# கயா ச்ராத்த மஹிமை

பித்ருக்களுக்காக கயை க்ஷேத்ரத்தில் கயை என்று பெயருடைய யாகத்தைச் செய்கின்றவனாலே (கயையில் கயா ச்ராத்தம் செய்வதினாலே, புத்திரன் தந்தையைக் காப்பாற்றுகிறான். 'புத்' எனும் நரகத்தில் இருந்து தந்தையைக் காப்பாற்றுவதால் புத்ரன் என்கிற பெயர் மகனுக்கு வந்தது என்று ச்ருதி சொல்கிறது. எனவே இல்லறத்தில் உள்ளவன் தனக்குப் பல பிள்ளைகள் வேண்டுமென்று ஆசைப்படவேண்டும். அவர்கள் நற்குணங்கள் உடையவர்களாகவும், நன்கு படித்தவர்களாகவும் இருக்கவேண்டும். ஒருவருக்கு இத்தகு குமாரர்கள் இருந்தால் ஒருவனாவது கயைக்குச் சென்று அக்ஷய வடத்தின் அருகில் பல்குனீ நதிக்கரையில் ச்ராத்தத்தைச் செய்து விஷ்ணு பாதத்தில் பிண்டம் ஸமர்ப்பித்துப் பித்ருக்களைக் கரையேற்றுவான் அல்லவா. கயை பித்ருக்களுக்கு ஸ்வர்கத்தை அளிக்கவல்லது என்று ராஜரிஷிகளால் நிச்சயித்துக் கூறப்பட்ட விஷயம் இது.

பித்ருக்களுக்கு மகிழ்வை அளிக்கக்கூடிய ச்ராத்தத்தை கயைக்குச் சென்று எவன் செய்கிறானோ அவனுடைய பிறவி பயனுள்ளதாக ஆகும். கயையில் எந்தெந்தப் பித்ருக்களின் பெயரைச் சொல்லிப் பிண்டம் அளிக்கிறானோ அந்தப் பித்ருக்கள் நரகத்தில் இருந்தால் ஸ்வர்கத்திற்கும் ஸ்வர்கத்தில் இருந்தால் மோக்ஷத்துக்கும் போவார்கள். கயையில் மூவுலகங்களிலும் ப்ரஸித்தமான

அக்ஷய்யவடம் என்கிற ஆலமரம் இருக்கிறது. அம்மரத்தின் அடியில் பித்ருக்களுக்கு அளிக்கப்பட்ட பிண்டமானது அழியாததாகும்.

அந்த ஆலமரத்தின் அடியில் ஒரு ப்ராஹ்மணனுக்குக் கீரையைச் சமைத்துப் போட்டாலும், பருக வெறும் தீர்த்தத்தைக் கொடுத்தாலும் கோடி அந்தணர்கட்குச் சாப்பாடு போட்ட பலன் கிடைக்கும். கயா க்ஷேத்ரத்தில் வளர்பிறை தேய்பிறைகளைக் கொண்ட ஒரு மாத காலம் யார் வசிக்கிறானோ அவன் ஏழு தலைமுறைகளில் உள்ள வம்சத்தினரைத் தூய்மையாக்குகிறான். அதாவது பாபங்கள் அற்றவர்களாக ஆக்கி நற்கதியைப் பெறச்செய்கிறான். இதில் ஐயத்திற்கே இடமில்லை. கயையில் வன்னிமரத்தின் இல்லை அளவிற்கு பிண்டப்ரதானம் செய்தாலும் ஏழு கோத்ரத்தைச் சேர்ந்தவர்களையும் நூற்றியொன்று குலத்தினரையும் கைதூக்கிவிடும். எனவே ஒரு மகன் தந்தையின் நற்கதிக்குச் செய்யவேண்டியதைச் செய்யவேண்டுமே ஒழிய அவரைப் பாபத்திற்கு ஆளாக்கக்கூடிய செயலைச் செய்யக்கூடாது.



கோவுடன் கோபாலதேசிகன்